# இருளிலிருந்து வெளிச்சத்திற்கு



**வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார். அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். அவள் புறப்பட்டு, அவரோடேகூட இருந்தவர்கள் துக்கப்பட்டு அழுதுகொண்டிருக்கையில், அவர்களிடத்தில் போய், அந்தச் செய்தியை அறிவித்தாள். (மாற்கு 16:9,10)**

மேற்கண்ட வசனங்களில் நாம் காண்கிற வார்த்தைகள் "முதலாம் நாள், அதிகாலை, எழுந்திருந்த பின்பு, முதல் முதல்" போன்றவைகள் ஒரு புதிய ஆரம்பத்தை குறிப்பதாய் உள்ளது. ஆம் மனித குலத்தின் புதிய யுகமான கிருபையின் காலத்தின் ஆரம்பத்தில், அதற்காக இரத்தம் சிந்தி மரித்து உயிர்த்த கிறிஸ்து தாமே நேரடியாய் வந்து, மனித குலத்திற்கு ஒரு பிரதிநிதியாய் மகதலேனா மரியாளை தேர்ந்தெடுத்து அவள் மூலமாய் மற்றவர்களுக்கு அதை வெளிப்படுத்தினார்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒன்று, இப்பேர்ப்பட்ட கிருபையை பெற்ற மரியாளிடமிருந்து ஆண்டவர் ஏழு பிசாசுகளை துரத்தியிருந்தார் என்பதாகும். ஆண்டவர் இவ்வுலகில் ஊழியம் செய்தது 3½ வருடங்கள் தான். எனவே அவள் விடுதலை பெற்றதும் இந்த 3½ வருடங்களுக்குள்ளாகவே இருக்கும். சற்று யோசித்து பார்ப்போமானால், மூன்று அல்லது நான்கு வருடத்திற்கு முன்பு வரை, ஒன்று, இரண்டு என்றல்ல ஏழு பிசாசுகள் பிடித்திருந்த அவளுடைய வாழ்வு எவ்வளவு இருளாய் இருந்திருக்கும். பக்திமான்களாய், நீதிமான்களாய் இருந்த மற்றவர்களை அவர் தேர்ந்தெடுக்காமல், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து வந்தவர்களையும் தேர்ந்தெடுக்காமல், தாம் ஊழியத்திற்கென

ஏற்படுத்திய அப்போஸ்தலர்களை கூட தேர்ந்தெடுக்காமல் மகதலேனா மரியாளை தேர்ந்தெடுத்தார். மரியாளிடம் இருந்து அவர் பிசாசுகளை துரத்தின சம்பவம் சுவிஷேச புத்தகங்களில் விவரமாக குறிப்பிடபடவில்லை. வேறு எந்த இடத்திலும் பேதுருவை போல, மற்ற அப்போஸ்தலர்களை போல மரியாள் பெயர் குறிப்பிடபடவில்லை. ஆனால் யாருக்கும் கிடைக்காத பாக்கியத்தை அவள் பெற்றாள்.

இதற்கு காரணத்தை யோவான் சுவிஷேசத்தில் நாம் காணலாம். **யோ 20: 1-18** வசனங்களை நாம் காண்கையில், முதலாவது அவள் கல்லறையில் வந்து பார்த்து விட்டு அங்கு ஆண்டவரின் சரீரம் இல்லாதபடியால் ஓடி சென்று பேதுருவையும் இன்னும் மற்றொரு சீஷனையும் அழைத்து வருகிறாள். ஆண்டவரின் சரீரம் இல்லாததை கண்டு, வந்த அவர்கள் தங்களுடைய இடத்திற்கு ஆச்சரியத்துடன் திரும்பி சென்றுவிட்டனர். ஆண்டவர் மரித்து விட்டார். அவர் சரீரத்தை கூட காணவில்லை. எனவே நம்மையாவது இனி காப்பாற்றி கொள்வோம் என்று யூதருக்கு பயந்ததினால், பூட்டிய அறையில் பாதுகாப்பாக இருக்க அவர்கள் சென்றுவிட்டனர். பிலாத்துவினிடதிற்கு துணிந்து சென்று ஆண்டவரின் சரீரத்தை கேட்டு பெற்று, அதை அருமையாக அடக்கம் செய்த **"கனம்பொருந்திய ஆலோசனைக்காரனும் அரிமத்தியா ஊரானும் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனுமாகிய யோசேப்பு" (மாற்கு 15:43-46)** கூட ஆண்டவரின் சரீரத்தை பற்றி கவலைப்படவில்லை.

ஆனால் **"மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள்; அப்படி அழுதுகொண்டிருக்கையில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து, இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள். அவர்கள் அவளை நோக்கி: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள்." (யோ 20:11-13).** இங்கு அவள் கண்ட தேவதூதர்களின் காட்சி இயற்கைக்கு அப்பாற்ப்பட்டதாய் இருந்தாலும், அதைபற்றி எல்லாம் அவள் சிந்தியாமல், அவள் இதயமெல்லாம், ஒன்றையே, இயேசுவின் சரீரத்தையே தேடினது.

மேற்கண்ட வசனங்களுக்கு அடுத்த வசனமான **யோ 20:14-16** வசனங்களில் **"இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள்; ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள். இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள். இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள்; அதற்குப் போதகரே என்று அர்த்தமாம்."** ஆம் ஒரு காலத்தில் அவளுக்குள் ஏழு பிசாசுகள் இருந்தது, ஆனால் இப்பொழுதோ முழுவதும் இயேசுவே அவளில் நிறைந்திருந்தார். ஆண்டவரின் சரீரம் காணவில்லை என்றபோது, மற்றவர்கள் அதை பற்றி அதிக அக்கறை

காட்டாமல் போனபொழுதும், அவள் இதயமோ தன் பாதுகாப்பை குறித்து கவலைப்படாமல் அவரது மரண சரீரத்தை எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என்றே அவள் தான் பார்த்த ஒவ்வொருவரிடமும் "**என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை**" என்பதையே சொல்லி கொண்டிருந்தாள். அழுகையோடும், ஒருவித பதற்றதோடும் அவரது சரீரத்தை தன்னம் தனியவளாய் தேடிகொண்டிருந்தாள். ஆதலால் அவளை தேடி இயேசு வந்தார். ஆகிலும் ஒரு நொடி தன்னை மறைத்து அவளிடம் "**ஏன் அழுகிறாய், யாரை தேடுகிறாய்**" என்ற கேள்வியை கேட்டார். அதற்கு அவள் கூறிய பதில் மிக அருமையானதாகும். அவள் "**அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள்**", இங்கு நாம் கவனிக்க வேண்டிய வார்த்தை நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்பதாகும்.

ஆம் அவர் சரீரம் இருக்கும இடத்தை மட்டும் காட்டுங்கள், யாரும் எனக்கு துணை வேண்டாம், தான் ஒரு பெண்ணாக இருந்த போதிலும், யாரையும் துணைக்கு அழைக்காமல், தோட்டக்காரர் என்று எண்ணின அவரையும் அழைக்காமல், நானே போய் அவரது உடலை எப்படியாவது எடுத்து கொண்டு வந்து மறுபடியும் நல்லடக்கம் செய்வேன் என்பதே அவளது நோக்கமாக இருந்தது. அப்பொழுது ஆண்டவர் அவளுக்கு தம்மை வெளிப்படுத்தினார். அவர் கூறியது ஒரே வார்த்தை மரியாளே என்பதாகும். அவரோடு பேசி கொண்டே இங்கும் அங்கும் தேடிதிரிந்த அவள் "மரியாளே" என்று ஆண்டவரின் தொனியை கேட்ட மாத்திரத்தில் திரும்பி பார்த்து "ரபூனி" என்றாள்.

ஆம் மரித்த சரீரத்தை தேடின அவள், அவர் உயிர்தெழுந்த வல்லமையோடு நிற்பதை கண்டபோது எவ்வளவு மகிழ்ந்திருப்பாள். பிசாசின் பிடியில் இருந்து இரட்சிக்கப்பட்டு ஆண்டவரண்டை வந்த அவள், உயிர்தெழுந்த கர்த்தரை கண்ணாற கண்டாள். இதற்கு ஒரே காரணம் ஆண்டவரை தேடின அவளது இருதயமே. இங்கு நாம் அறிந்து கொள்கிற ஒரு சத்தியம் என்னவென்றால், எப்பேர்பட்ட பாவ சேற்றில் இருந்திருந்தாலும், எத்தனை பிசாசுகளின் பிடியில் அகப்பட்டிருந்தாலும், ஆண்டவரால் சந்திக்கபடும்பொழுது அவற்றில் இருந்து விடுதலை பெறும் நாம், அத்தோடு நின்று விடாமல் இயேசுவையே நம்மில் முழுவதுமாய் நிறைத்து கொள்ளவேண்டும். அப்பொழுது உயிர்தெழுந்த வல்லமையோடு கிறிஸ்து நம்மூலமாய் வெளிப்படுவார். வேறு எந்த விஷேச தாலந்தையோ, திறமையையோ ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கவில்லை. இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வந்த நம் வாழ்வு, அவ்வெளிச்சத்தை பிரதிபலிப்பதாய் மாறவேண்டும். தேவன் தாமே அப்படிப்பட்ட கிருபையை நம் ஒவ்வொருவருக்கும் தருவாராக. ஆமென், அல்லேலூயா.